| | | | |
|---|---|---|---|
| | **வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம்** | | |
| | **மூன்றாம் தவணைப் பரீட்சை– 2018** | | |
| | **தரம் - 8** | **தமிழ்மொழியும் இலக்கியமும்** | **நேரம் : 2 மணித்தியாலம்** |

சுட்டெண் :- ..............................

## பகுதி - I

❖ **இவ்வினாத்தாளிற்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.**
❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) நீர் கானகம் செல்வதுதான் சரி இல்லையென்றால்.....
இங்கு கானகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. நாடு 2. காடு 3. நகரம் 4. கோவில்

02) திராட்சைப் பழங்கள் சூரிய வெப்பத்தில் உலர்வதாலேயே கொடி முந்திரி பழவற்றலாகிறது.
1. காய்தல் 2. நனைதல் 3. பழுத்தல் 4. ஊறுதல்

03) உருவத்தைப் பார்த்து நாம் யாரையும் எடை போடக்கூடாது. இங்கு உருவம் என்பதன் எதிர்ச்சொல்
1. நிழல் 2. அருவம் 3. உருவமற்றது 4. அருவுருவம்

04) விதியாம் தேரினிலே காலதேவன் விரைந்து செல்கிறான். விரைதல் என்பதன் எதிர்ச் சொல்.
1. அறுதல் 2. விரைந்து 3. வேகமாக 4. உடனடி

05) தமிழன் என்று தலைநிமிர்ந்து சொல்லடா. தமிழன் என்பதன் எதிர்பாற் சொல்
1. தமிழினி 2. தலைவி 3. தமிழி 4. தமிழிச்சி

06) கடிதங்கள் தற்பொழுது ஈ மெயில் (E-mail) மூலமே அனுப்பப்படுகின்றன. ஈ மெயில் என்பதன் தமிழ்க் கலைச்சொல்
1. கணினி 2. மடிக்கணினி 3. மின்னஞ்சல் 4. தாள்

07) அவள் இனிமையாகப் பாடினாள் இனிமை என்பது
1. பெயரடை 2. வினையடை 3. பெயர்ச்சொல் 4. செயற்படு அடை

08) வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி. இவ் வாக்கியம்
1. ஏவல் வாக்கியம் 2. உணர்ச்சி வாக்கியம்
3. வியங்கோள் வாக்கியம் 4. கூற்றுவாக்கியம்

09) முள் + செடி என்பதைப் புணர்த்தினால்
1. முள்ச்செடி 2. முட்செடி 3. முள்ளுச்செடி 4. முட்டாள்ச்செடி

10) எதிர்ப்பொருள் இணைமொழியைக் கொண்டது
1. உற்றார் உறவினர் 2. கரடுமுரடு
3. ஏற்ற இறக்கம் 4. வற்றி வரண்டு


kalvi.lk

11) பொற்காசு என்பது எவ்வகைப் புணர்ச்சி
1. விகாரம் 2. இயல்புப்புணர்ச்சி 3. திரிதல் 4. தோன்றல்

12) பிரபா சிரித்துச் சிரித்து பேசுவான் இங்கு சிரித்துச் சிரித்து என்பது
1. இரட்டைக்கிளவி 2. இணைமொழி
3. அடுக்குத் தொடர் 4. அடுக்கிடுக்குத் தொடர்

13) இளங்கோவில் கம்பர் சிறந்தவன். இங்கு இடம்பெற்ற வேற்றுமை உருபு
1. 5ம் வேற்றுமை 2. 2ம் வேற்றுமை
3. 3ம் வேற்றுமை 4. 7ம் வேற்றுமை

14) அரசன், இறைவன், இடம், வீடு என்பன குறிக்கும் பல பொருள் குறித்த ஒரு சொல்
1. மதி 2. பதி 3. கவி 4. அளி

15) பயனற்றது என்னும் பொருள் தரும் உவமைத் தொடர்
1. ஒளியைக் கண்ட இருள் போல
2. நகமும் சதையும் போல
3. செவிடன் காதில் ஊதிய சங்கு போல
4. தலையிருக்க வால் ஆடுவது போல

16) வேடர்கள் கூட்டம்
1. வேட்டையாடியது 2. வேட்டையாடின
3. வேட்டையாடினார்கள் 4. வேட்டை சென்றது

17) நானும் அவனும் பாடசாலை
1. சென்றேன் 2. சென்றான் 3. சென்றோம் 4. செல்

18) ஆகா என்ன அழகு இங்கு இடம்பெற வேண்டிய நிறுத்தற்குறி
1. காற்புள்ளி 2. வினாக்குறி
3. மெய்ப்பாட்டுக்குறி 4. மேற்கோட்குறி

19) மேகம் கறுத்தது ......................... மழை பொழியவில்லை
1. ஆகவே 2. அதனால் 3. எனினும் 4. எனவே

20) பின்வருவனவற்றுள் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.
1. கடதாசி காற்றில் உருண்டது.
2. கடுதாசி காற்றில் உருண்டது
3. கடதாசி காத்தில் உருண்டது
4. கடுதாசி காத்தில் உருண்டது

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)


Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வரும் தலைப்பினுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1. திருவள்ளுவர் கூறும் அடக்கமுடைமை
2. வாசிப்பின் முக்கியத்துவம்
3. நாட்டார் பாடல்கள்
4. கிழிந்த நூல் ஒன்று தன் கதை கூறல்

(20 புள்ளிகள்)

02) டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட உமது நண்பனுக்கு டெங்கு நோயின் தன்மை எவ்வாறு டெங்கிலிருந்து பாதுகாப்பை பெறலாம். போன்றவற்றை விபரித்து ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03) பின்வரும் வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

1. மாப்பொருள், புரதம் ஆகியன மனிதருக்கு என்ன நன்மைகளை அளிக்கின்றன.
2. எலியால் எச்சில்படுத்தப்பட்ட உணவை உண்பதால் ஏற்படும் நோய்கள் எவை?
3. குமண மன்னனின் சிறந்த குணங்கள் எவை?
4. தேனீயும் குளவியும் கவிதையின் ஆசிரியர் யார்?
5. "அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்" இக் குறளின் பொருளைத் தருக.
6. மனுநீதிச் சோழனுடைய உயிர்நேயம் எவ்வாறு காட்டப்படுகிறது.

(10 புள்ளி)

04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

இட்டதோர் தாமரைப் பூ
இதழ் விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லைக் குத்துமில்லை
வேறு வேறிருந் தருந்தும்
கட்டில்லைக் கீழ் மேல் என்றும்
கண்மூடி வழக்க மில்லை

1. இப்பாடல் எதனுடைய ஒற்றுமை நிறைந்த வாழ்வைச் சுட்டுகிறது?
2. புறாக்கள் எவ்வாறு அமர்ந்து உணவையுண்டன?
3. இப்பாடலில் உள்ள உவமையணியை எழுதுக.
4. புறாக்களிடம் எத்தகைய கீழான குணங்கள் இல்லை?
5. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொற்களைத் தருக.

I. தாமரை -.........................................................

II. கீரை - ...........................................................



kalvi.lk

05) வறுமைக்குட்பட்டவர்களுக்கு கொடுத்துதவுவது தான் பெரும் புகழ். நீங்கள் வறிய மாணவர்களுக்கு நிரந்தரமான கொடையாக அறிவைக் கொடுக்கின்றீர்கள். பெருமையாகப் பேசப்படுவது அது தான் புகழ். புகழ்தான் அழியாதது. பொருள் குறையக்குறைய புகழ் வளரும். புகழைத் தேடாதவர்களின் வாழ்க்கை பழியுடையது. பொருள் இருந்தென்ன பிரியோசனம் தயவு, தாட்சணயப், அன்பு பொறுமை என்று சொல்லப்படுகின்ற அருள் இருத்தல் வேண்டும்.

1. பெரும் புகழ் தருவது எதுவெனக் கூறப்படுகிறது.
2. எது அழியாதது?
3. புகழ் எப்போது வளரும்?
4. பொருள் இல்லாவிட்டாலும் எவை இருக்க வேண்டுமெனக் கூறப்படுகின்றது?

(10 புள்ளி)

06) பின்வரும் சொற்களில் ஐந்திற்கு பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்குக.

1. அணி அணி
2. அழுதழுது
3. பாவபுண்ணியம்
4. தட்டுத் தடுமாறி
5. பசுமரத்தாணி போல
6. செவிமடுத்தல்

(10 புள்ளி)

Education கல்வி அධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457